உ

சிவமயம்.

பிறவிப்பிணி வறுமைப்பிணி தேகப்பிணி

ஆகிய முப்பிணியைச் சங்கரிக்கும்

# சஞ்சீவி.

கிரமத்தவறு விப்பிணிகள் இப்பிறவியோ டொழியாவிடத்து

மீண்டும் மானுடதேகத்தையே பெற்றுக்கொள்ளவும்

## நந்தியந்தேவர்

சிவபெருமானிடம் பிரார்த்தித்துப்பெற்ற

பிறர்தனம்மதித்திடா வாழ்வுமுதலாகிய பதினாறுவரங்களை

இப்பிறவியிலே நாம் சிவபிரானைப் பிரார்த்தித்துப்

பெற்றுக் கொள்ளவும் வேண்டிய

## விதிகள்.

Lion. S. Sriganeshan

இவை

ஊர்காவற்றுறை

இரேகுத்துரையாகவிருந்து

இப்போ உபகாரச் சம்பளம்பெற்று விளங்கும்

வண்ணார்பண்ணை

## ஆ. சுப்பிரமணியபிள்ளை

அவர்கள் செய்தது.

கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

1911.

உ

சிவமயம்.

# பிறவிப்பிணி, வறுமைப்பிணி, தேகப்பிணி ஆகிய
# முப்பிணியைச் சங்கரிக்கும் சஞ்சீவி.

இதிற் சொல்லப்படும் விஷயங்களெல்லாம் மகான்களுடைய வாக்கிலிருந்து எடுத்துத்திரட்டி அமைக்கப்பட்டமையால், இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் இவைமுற்றும் பொய்யாமொழியென வுணர்ந்து இதிற்கூறியபடி நடந்து தங்கள் தங்கள் பிறவிப்பிணியை நீக்கிக்கொள்ளும்படி வினைகளை வேரறுக்கும் விநாயகப்பெருமான் திருவருள் புரிவாராக.

இப்பூவுலகில்வாழும் மானுடர்களோ அநந்தகோடி. அவர்கள் வசிக்கும் ஊர்களோ எண்ணில. சாதிபேதங்களோ அநேகம். சமயபேதங்களோ பல. வணங்கும்வழிகளோ அநேகபேதம். ஆயினும் ஒவ்வொரு சமயத்தவருக்கும் தனித்தனி வெவ்வேறு கடவுளில்லை. கடவுளொருவரே. அவரை ஒவ்வொருசமயத்தவரும் வெவ்வேறு நாமங்களைச் சொல்லி வணங்குவர். அப்படியே அந்தச்சமயநூல்களில் விதித்தபடி நடவாதவர்கள் நரகத்தில் வீழ்ந்து வருந்திப் பின் கீழ்ப்பிறவியெடுத்துழல்வார்கள்.

ஆனால் அவ்வச்சமயாசாரவொழுங்கு தவறாமல் நடப்பவர்கள் மேற்பிறவிகளிற் பிறந்து பலபோகங்களையு மநுபவித்து ஈற்றில் மோக்ஷத்துக்கு நேர்வாயிலாகிய சைவசமயத்திற்பிறந்து அதன்படியொழுகி யோகஞானங்கள் வழியாக முத்தியடைவார்கள். சமயங்கள் பலதிறத்தனவாயினும் சைவசமயமொன்றே முதற்சமயமாகும். வேதசிவாகமங்களில் விதித்தபடி நடப்பவர்களே பின் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலின்றி மோக்ஷத்தையடைவார்கள்.

**சமயங்களெல்லாவற்றிற்குங் கடவுளொருவரே என்பதற்குப் பிரமாணம்; சித்தியார்.**

"யாதொருதெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார் தாம்வருவர்"

**சைவசமயமே முதற்சமயமென்பதற்குப் பிரமாணம்; தாயுமானசுவாமிகள் வாக்கு.**

"சைவசமயமேசமயம்சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ்சமயநெறிபுகுதவேண்டாம்முத்திதரும்
தெய்வச்சபையைக்காண்பதற்குச்சேரவாருஞ்செகத்தீரே" என்பதனா லறிக.

சிவபெருமான்முனு தெய்வம்? இதரதெய்வங்கள் தெய்வமல்லவா? என்று வினவுவார்களாயின், வேதாகமபுராண ஸ்மிருதிகளெல்லாம் சிவபெருமானே பரமபதியென்று முழங்கிக் கூறுகின்றன. அஃதன்றியும் முன்னொருகாலத்தில் காசிநகரில் நந்திகேசுவரருக்கு முன்னாக நின்று வியாசபகவான் தமது கையை உயர்த்தி "விட்டுணுவே தெய்வம்" என்று கூறியபோது அவர் நாவுங் கையும் அவ்வளவிற் றம்பித்துநின்றதுவே சிவபெருமானே முழுமுதற்கடவுளென்பதற்குப் போதிய சான்றாகும். "சிவனையொக்குந்தெய்வந்தேடினுமில்லை" "சிவனையாவுந்தேறினன்காண்" "இவனையன்றியிவனையொருதேவில்லை."

### தேவாரம்.

நூறுகோடிபிரமர்கள்நொங்கினர், ஆறுகோடிநாராயணரங்ஙனே
ஏறுகங்கைமணலெண்ணிலிந்திரர், ஈறிலாதநல்லீசனொருவனே.

இனிச் சைவாகமங்களில் விதித்தபடி பதிபசுபாச விலக்கணங் கூறுகின்றேன். பதி என்பது சிவன். பசு என்பது ஆன்மா. பாசமென்பது ஆன்மாவைப் பந்தித்திருக்கும் ஆணவங் கன்மம் மாயை. இவைமூன்றுமனாதி. இதற்குப்பிரமாணம்:

### வள்ளலார்சாத்திரம்.

பதிபசுபாசமெனப்பகர்மூன்றிற், பதியினைப்போலப்பசுபாசமனாதி
பதியணுகாப்பசுபாசமதாமே, பதியணுகிற்பசுபாசநில்லாதே.

பதிபசுபாசமூன்றும்பகுத்தறிந்தவரேமுத்தர்
பதியொன்றும்பற்றாதாகும்பசுவொன்றைப்பற்றிநிற்கும்
பதிமுகந்தெரியாவண்ணமறைப்பதுபாசமாகும்
பதிகுருவானஞான்றுநீங்குமப்பாசந்தானே.

## பதியிலக்கணம்.

### திருமந்திரம்.

"காலினூறுகரும்பினிற்கட்டியும், பாலினுணெய்யும்பழத்திலிரதமும்
பூவினினாற்றமும்போன்றுளனீசன், காவலனெங்குங்கலந்துநின்றானே"

### வள்ளலார்வாக்கு.

"நீரிடையுப்பும்பாரிடையப்பும், தாயிடைச்சூலுந்தளிரிடைத்துவளுந்
தீயிடைவெம்மையுஞ்செறிந்தாங்கன்ன, வறிவிடையீசனமர்ந்தாங்குறலே"

"ஒன்றாயும்பலவாயுமுருவாயுமருவாயுங், குன்றாயுமணுவாயுங்குணமாயுங்குணியாயு, நன்றாயுந்தீதாயுநானாயுந்தானாயு, மின்றாயுமுளதாயுமிருக்குமந்தப்பரமசிவம்"

"பதியாவதொன்றாய்ப்பரிபூரணமாய்—இதமாகிநிற்குஞ்சிவம்"

"அற்றார்கண்ணிதாயல்லார்க்குச்சேய்மையாய்ப்—பற்றற்றிருக்கும்பதி"

"பத்தர்க்கெளியனாய்ப்பதிதற்கரியனாய்ச்—சித்தத்துணிற்குஞ்சிவம்"

"திருநாமமைந்தெழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணன்றிறமொருகாற் பேசாராகில், ஒருகாலுந்திருக்கோவில்சூழாராகில்உண்பதன்முன் மலர்பறித் திட்டுண்ணாராகில், அருநோய்கள்கெடவெண்ணீறணியாராகினளியற்றார்பி றந்தவாறேதோவென்னிற், பெருநோய்கள்மிகநலியப்பெயர்த்துஞ்செத்தும் பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே."

"பூக்கைகொண்டரன்பொன்னடிபோற்றிலீர்
நாக்கைக்கொண்டரன்னாமநவில்கிலீர்
ஆக்கைக்கேயிரைதேடியலம்வந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே."

வள்ளலார்.

"மானும்மழுவுங்கரந்துமானுடன்போல்வந்தாரைப்
பூநீருங்கொண்டடிக்கீழ்ப்போற்றாதார்—கானகத்துள்
வேடராய்நாடோறும்வெம்பசியினாலலைந்து
பீடினரகம்புகுவார்பின்."

என்றிப்படியெல்லாம் மகான்கள் கூறியிருக்க, அநேகர் சிவபூசைபண்ணுதல் பிராமணருக்குஞ் சைவருக்குமேயன்றித் தங்களுக்குரியதன்றென்றும், அப்படிச்செய்வதில் தொல்லையதிகமுண்டென்றும் கூறுகின்றனர். இன்னும் அன்னதானஞ் செய்தல், மாடு ஆடு முதலிய பிராணிகளுக்கு உணவூட்டல்முதலிய பதிபுண்ணியங்களைத் தனவான்களே செய்வதன்றி ஏழைகளாகிய நாங்கள் செய்வதற்குப் பொருளில்லையென்றுங் குறை கூறுகின்றனர். இதுமுழுதும் அறியாமை. கேளுங்கள், கேளுங்கள், எக்குலத்தினரும் எவ்வயதினரும் எந்நோயாளரும் வறியவரும் இரப்பவரும் ஆகிய எவர்களும் மிக இலகுவிற் செய்யக்கூடிய, பதிபுண்ணியங்களுள் விசேடமாகிய நான்கு முக்கியகருமங்களிருக்கின்றன. அவையாவன:

1. வது. உதயத்துக்குமுன் படுக்கைவிட்டெழுந்து இயன்ற சுத்திசெய்து காலைக்கடனை முடிக்கும்பொழுது சிவபிரானை நினைத்துச் சிவநாமஞ்சொல்லி ஒருபத்திரமாவது சாத்திப் பின் போசனம் செய்தல். இது யாவருஞ் செய்யக்கூடிய விஷயம்.

2. வது. எவர்களுக்கும் உணவுக்குப் பெருமுபயோகமானதும், எவ்வகைச் சுத்திக்கும் இன்றியமையாததும் ஆகிய பஞ்சகவ்வியத்தைக் கொடுக்கும் பசுவுக்கு ஒருபிடி புல்லாவது குழையாவது கொடுத்தல். இதுவும் யாவருஞ்செய்யக்கூடிய விஷயம்.

3. வது. எவர்களும் போசனம் பண்ணும்பொழுது ஒருவிருந்தாளியோடாவது உண்ணல். ஔவையார்வாக்கு.

"மருந்தேயாயினும் விருந்தோடுண்."

இன்னுமோர் மகானுடைய வாக்கு.

"பாத்திருந்துண்மின்பழம்பொருள்போற்றன்மின்
வேட்கையுடையீர்விரைந்தொல்லையுண்ணன்மின்
காக்கைகரைந்துண்ணுங்காலமறியீரோ"

ஆதலினால் எவ்வகை யாசகராயினும் தாமிரந்துபெற்ற அன்னத்தை உண்ணுமுன் பிறவுயிருக்கு உபயோகமாகும்பொருட்டு ஒருபிடி அன்னமெடுத்து வேறாகவைத்து எஞ்சிய அன்னத்தையே உண்ணல்வேண்டும். இப்படியே ஒருவீட்டிலிருக்கும் ஒவ்வொருவரும்எடுத்துவைக்கும் அன்னம் அவ்வீட்டுக்குவரும் ஒருஎளையின் பசியைத் தணிப்பதற்குப் போதியதாகும். ஆகவே இரப்பவர்களும் இப்படிச்செய்தல்வேண்டும். இதுவும் யாவருஞ் செய்யக்கூடிய விஷயம்.

4. வது. பிறர்மனம் வருந்தாவண்ணம் இனிய சொற்களைக் கூறல். "சீரோரராயினுந்தாழவுரை" என்பது ஔவையார்வாக்கு. இதுவும் எவராலுஞ் செய்யக்கூடியது.

**மேற்கூறிய நான்குக்கும் பிரமாணம்.**

**திருமந்திரம்.**

"யாவர்க்குமாமிறைவர்க்கொருபச்சிலை
யாவர்க்குமாம்பசுவிற்கொருவாயுறை
யாவர்க்குமாமுண்ணும்பொழுதொருகைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே."

மேற்கூறிய நாலுபுண்ணியங்களும் எவர்களும் செய்யக்கூடிய பதிபுண்ணியமென உணருங்கள்! உணருங்கள்!!

ரு. யாவரும் அனுட்டானமுதலிய கிரியைகள் செய்யும்போதும் அருட்பாக்களை ஓதும்போதும் கண்டம் முதலிய விடங்களில் உருத்திராக்கம் அணிந்திருத்தல்வேண்டும். அப்படி அணியாமற் செய்யும் பூசை தோத்திரங்களால் யாதொரு பிரயோசனமுமில்லை. உருத்திராக்கம் அணியாமல் ஆலயத்துட் பிரவேசிக்கக் கூடாது; சென்றாற் சிவபெருமானுக்கு மிகுந்த வெறுப்பை உண்டாக்கும்.

**இதற்குப்பிரமாணம்; சைவசமய நெறி.**

"பூண்பதற்குக்கண்டியினைக்கூசியிடும்புல்லியரைக்
காண்பதற்குக்கூசுமரன்கைத்து."

"பூணமற்கண்டியினைப்பூசைபுரிவார்பலத்தைக்
காணார்பூணுய்கண்டிகை."

இதுமட்டோ உருத்திராக்கத்தை எந்தநேரத்திலும் அங்கத்திலணிந்திருத்தல்வேண்டும். அணிந்திருப்பின் அன்றன்று செய்யுந் தீவினைகள் நாசமாகும்.

உருத்திராக்கத்தை யணியாதவருடைய தேகம் மலத்தையுண்ணும் பன்றியினுடைய தேகத்துக்குச் சமமாகும்.

**இதற்குப்பிரமாணம்.**

"அணிவதென்றுமுருத்திரவக்கமே—பணிவதீசன்கமலப்பதத்தினே."

## பசுவிலக்கணம்.

"இருவினைமுசலம்யாக்கையுரலே—அதிற்பெய்பண்டம்போலாருயிரே
நிரைநிரைதாக்கநெளிவபுழுங்கி—யடுவான்காலையல்லற்பட்டு
விடுவான்காலவிம்மிதமுறுமே"

"கொடிவிழியன்னகொள்கையனுகி—ஆசாபாசத்தார்ப்புண்டன்றே
தன்னைமுன்னிட்டுத்தான்பின்னுகி—மறந்துநினைந்துமதிகதனுகி
யாகம்பேணியறிவைமறந்தாங்—கிச்சைப்புலிவாயிடர்ப்படுமுயிரே"

## பாசவியல்பு.

"அவிரொளியீசனையன்னியனென்றும்
இருள்புரியாக்கையையாளெனதென்றும்
மன்னியமடந்தையையாருயிரென்றும்
முன்னுறச்செய்தலுமுயிர்மலமோரே."

இவற்றுள், பசுவாகிய சீவன், வேதசிவாகமங்களில் விதித்தபடி சிவபிரானை வழிபட்டுப் பிறவிக்கடல் கடந்து, முத்திப்பேறு கிடைத்தற்கேற்ற மானுடதேகத்தை எடுத்தல் அரிதினுமரிது. மானுடதேகத்தினருமையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பிரமாவுக்கு வயசு ௧00. அஃதாவது கிரேத திரேத துவாபர கலியுகமாகிய நாலுஞ்சேர்ந்தது ஒரு சதுர்யுகம். இப்படியே ௨000 சதுர்யுகஞ்சென்ருல், பிரமாவுக்கு ஒருநாள். இப்படி ௩0-தரஞ்சுற்றிவந்தால் ஒருமாசம். அப்படி ௧௨-முறை சுற்றிவந்தால் ஒருவருடம். இப்படி நூறுதரஞ் சுற்றிவந்தால் பிரமாவுக்கு வயசு ௧00. அப்போது அவருடை ஆயுசுமுடியும். இப்படிப்பட்ட ஒரு பிரமகற்பத்திற்ருனும், தென்சமுத்திரக்கரையிலிட்ட நுகத்தினது துளையிலே வடசமுத்திரக்கரையிலிட்ட கோலொன்று சென்று கோத்தல் அருமையினுமருமை. அப்படி ஒன்றுதலும் அருமையல்ல. பின். எது அருமை? என்று கேட்டால், யானைமுதலெறும்பீருகிய எண்பத்துநான்கு நூருயிர யோனிபேதமாகிய ஜனனங்களை எடுத்து ஈற்றில் மானுடயாக்கையை யெடுத்தலே அருமை. அங்ஙனமெடுத்தாலும் கூன் குருடுமுதலிய ஊனங்களின்றி நல்லோர்வசிக்கும் புண்ணியபூமியிற் பிறந்து ஆகமசாத்திரங்களை வாசித்து அதன்படி நடந்து முத்திபெறுதல் அரிது அரிது. இதற்குப்பிரமாணம்:

### அறிவானந்தசித்தியார்.

"தேரிற்சதுர்யுகயிரண்டாயிரநாட்டிங்களாண்
டந்நூற்றிலயன்மாண்டொந்தமுமுற்றுந்தென்பாற்
சேருநுகத்துளையில்வடபாற்கழிசெல்லெளிது
சாரும்பிறப்பொழிந்திம்மானிடத்திற்செனிக்கரிதே.

அரியதிம்மானுடமாகியருஞ்சுனைநீருருந்தித்
திரியுமங்காட்டிடைதப்பிநன்னுட்டிடைசேர்வரிதிங்
குரியபிரபஞ்சத்தினிலைபொய்யென்றிக்குண்மைநன்னூ
றெரிதலரிதுபயன்கேட்டதனிலைசேர்வரிதே." இன்னும்,

### வள்ளலார்சாத்திரம்.

"எண்பத்துநான்கிலக்கம்யோனிதோறும்புக்கதுவாய்ப்
புண்பொதியும்யாக்கைபுணரும்."

"புண்ணியத்தால்மேலேறும்பாவத்தாற்கீழிறங்கும்."

"கூத்தியைப்போற்பாவங்குலக்கொடிபோற்புண்ணியங்கள்
நீத்தாற்கிரண்டுநெருப்பு"

"மக்களாக்கையிற்பிறத்தலேயரிதுமற்றதிலும்
துக்ககூன்குருடுமையைத்துறத்தலுமரிது
நற்குலத்திடைவருதலுமரிதுஞானத்தால்
முக்கணீசனுக்காட்படல்முற்றினுமரிதே."

இவ்விதமாகச் செனித்த மானுடர் தம்மைவழிபட்டு முத்தியடையும்பொருட்டுச் சிவபெருமான் இம் மானுடதேகத்தில், சிவாலயங்களையுஞ் சிவனடியார்களையும் வணங்கத் தலையையும், தெரிசிக்கக் கண்களையும், புராணகாவியங்களைக் கேட்கக் காதுகளையும், சிவநாமங்களை உச்சரித்து அருட்பாக்களாற் றோத்திரஞ்செய்ய நாவையும், புட்பங்களா லருச்சிக்கக் கைகளையும், திருக்கோவில்களை வலம்வரக் கால்களையும், எப்பொழுதும் தம்மைச் சிந்திக்க மனத்தையும் வகுத்திருக்கிறார். இதற்குப்பிரமாணம்:

### சிவபெருமான் உமாதேவியாருக்கு அருளிச்செய்தது:

"அன்னவதிசயம்லிங்கந்தனைக்காணக்கதைகேட்கவடியிற்றாழச்
சன்னதியிற்சூழ்போகவருச்சிக்கப்புகலமணந்தனையேகொள்ளப்
பன்னருங்கண்காதுசென்னிகால்கைவாய்மூக்கிவைகள்படைத்துளாரால்
இன்னவகைகொண்டெம்மைவழிபடாதினையார்நரகுறுவரியம்புமாதே.

### திருக்கயிலாசத்திற் சிவசந்நிதியில் சேரமான்பெருமான்முதலிய மகான்களரங்கேற்றிய திருவுலா.

"சொல்லாதனகொழுநாவல்லச்சோதியுட்சோதிதன்பேர்
செல்லாச்செவிமரமேறித்தொழாதகையண் துணிந்த
கல்லாம்நினையாமனம்வணங்காத்தலையும்பொறையாம்
அல்லாவவயவந்தானும்மனிதர்க்கசேதனமே" இன்னும்.

"கண்ணுதலாலயம்நோக்குங்கண்களேகண்கள்
கறைக்கண்டன்கோயில்புகுங்கால்களேகால்கள்
பெண்ணொருபாகனைப்பணியுந்தலைகளேதலைகள்
பிஞ்ஞகனைப்பூசிக்குங்கைகளேகைகள்
பண்ணவன்றன்சீர்பாடுநன்றாவோநன்றா
பரன்சரிதையேகேட்கப்படுஞ்செவிகளேசெவிகள்
அண்ணல்பொலன்கழல்நினைக்குநெஞ்சமேநெஞ்சம்
அவனடிக்கேயடிமைபுகுமடிமையேயடிமை"

"சிந்தனைசெய்யமனமமைத்தேன்செப்பநாவமைத்தேன்
வந்தனைசெய்யத்தலையமைத்தேன்கைதொழவமைத்தேன்
பந்தனைசெய்வதற்கன்பமைத்தேன்மெய்யரும்பவைத்தேன்
வெந்தவெண்ணீறணியீசற்கு இவையான்விதித்தனவே"

இவ்வாறே பற்பல பிறவிகடோறுஞ்செய்த புண்ணிய மேலீட்டினால் அருமையாகப்பெற்ற இத்தேகம் நீங்கினால் எப்பிறவி எடுப்போமென்பது எங்களுக்குத் தெரியாது.

"இப்பிறவிதப்பினால் எப்பிறவிவாய்க்குமோ யாதுவருமோ வறிகிலேன்" என்னுந் தாயுமானசுவாமிகள் வாக்கை உணர்ந்து இத்தேகம் அழியுமுன் ஆகமவிதிப்படி சிவபிரானைப் பூசித்து முத்தியடைதற்குப் பிறவிநோயை நீக்குஞ் சஞ்சீவிமூலிகையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அதனையுண்டு பிறவிப்பிணியை நீக்குங்கள்.

சைவசமயானுசாரிகளாகிய ஆண்பெண் என்னுமிருபாலாரும் விதிக்கப்பட்ட இளம்பராயத்திற் சமயதீட்சைபெற்று அந்தி சந்தி அனுட்டான செபங்களைக் கிரமப்படி குறித்தநேரத்திற் செய்து முடித்தல்வேண்டும்.

க. சகலருஞ் சூரியனுதிக்க ஐந்துநாழிகைக்குமுன் நித்திரைவிட்டெழும்போது விபூதிதரித்துக்கொண்டு, புறத்தேசென்று அவசியகருமங்களை முடித்துத் தந்தசுத்திசெய்து ஸ்நானம்பண்ணித் தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துப் பூதியணிந்து உருத்திராக்கம் பூண்டு வழக்கமாகிய அனுஷ்டான செபங்களையும் சிவபூசையையும் முடிக்குந்தருணத்தில் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியகோளறுபதிகம்பதினொருபாக்களையும்,மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய நமச்சிவாயப்பதிகத்தையும் "நான்முகன்முதலாகியவானவர்தொழுதலும்" என்னும்முதலையுடைய போற்றித்திருவகவலையும்பாராயணஞ்செய்துவறுமைப்பிணியையும்,எவ்வகைச்செய்கையையும் செய்யவொட்டாதுதடுக்கும்சரீரப்பிணியையும் நீக்கும்படி பிரார்த்தியுங்கள். சிவபூசைசெய்யும்படி விசேடதீக்கைபெறாத மற்றெல்லாரும் ஒருபத்திரமாவதெடுத்துச் சிவபெருமானை நினைந்து சிவநாமஞ்சொல்லிச் சாத்தல்வேண்டும். இதற்குப் பிரமாணம்:

**ஞானப்பிரகாசசுவாமிகள் வாக்கு.**

கதிரவனெழுமுன் கடிகையைந்தென
மதிபெறவெழுந்துமகேசனைநினைந்து
துகளறுசரீரசுத்திகள்செய்து
தகைமைசேர் தந்ததாவனஞ்செய்து
போந்துநன்னதிமுதற்புனல்களினாடித்
தோய்த்துமுன்காய்ந்ததுகிலினையுடுத்தே.

உ. இங்ஙனம் பூசையை முடித்தபின் சமீபத்திலிருக்குந் தேவாலயத்துக்குச் சென்று கோபுரநமஸ்காரஞ்செய்து வலம்வந்து உட்பிரவேசித்து ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் பிரசுரித்த சிவாலயதரிசனவிதிப்படி தெரிசனஞ்செய்து வீட்டுக்குப்போதல் வேண்டும். போய் வழக்கப்படி உணவுகளை உண்டு பின் சீவனார்த்தத்திற்குரிய பணிவிடைகளைச் செய்யப்புகுதல்வேண்டும். பணிவி

டை முடிந்தபின் வீட்டுக்குவந்து சூரியன் அஸ்தமிக்குமுன் சந்தியாவந்தன செபங்களைச்செய்து முடித்தல்வேண்டும். பின்பு திவ்விய சிவசரித்திரங்களை வாசிப்பித்துக் கேட்டல்வேண்டும். அதன்மேல் போசனம் முடித்துக்கொண்டு நூறடிக்குக் குறையாமற் குறுநடைசெய்து சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு பத்துநாழிகைக்குமுன் சயனித்தல்வேண்டும். இவ்வாறு செய்யும் பூசை தோத்திரங்களெல்லாம் சிவபெருமானுக்குப் பிரீதியாயிருக்கும்.

### இதற்குப்பிரமாணம் திருமந்திரம்.

“இந்துவும்பானுவுமிலங்காத்தலத்திடை
வந்தித்தநந்திக்குமாபூசையாமே”

### இன்னும் உமைக்குச் சிவபெருமானருளிச்செய்த சாரநூல்.

கிழக்கிரவியெழுதன்முன்னே வளமுடனே பூரணத்திற் கான்முன்வைத்து, வந்திருந்துநமைநினைந்துவாழ்த்தல்செய்தே, உளம்நினைந்துபோவதெல்லாம்பலிக்குந்துன்பம்உண்டாகாதிதனைநீயுணர்ந்துதேறே.

இப்படியிருக்க உதயத்துக்குப்பின் படுக்கைவிட் டெழுந்து அநேகர் தங்கள் தங்கள் வசதிப்படி நினைத்த நேரத்திற் காலைக்கடனை முடிக்கிறார்கள். அப்பொழுதே “போசனம் ஆயத்தமா”? என்று வினவியே சந்தியாவந்தனாதிகளை முடிப்பார்கள். அப்படி முடிக்கும் பூசை தோத்திரங்களெல்லாம் சிவபெருமானுக்குப் பிரீதியா யிருக்கமாட்டாவாம். அப்பூசை அசுரப்பிரீதியாய் முடியும். அதுமட்டோ! காலையிற்றுயில்வோருடைய தேகம் மூத்தவள் வசிக்கும் ஆலயமென்று பெரியோர் கூறுவர். இதற்குப்பிரமாணம்:

“காலைதுயில்வானுங்கைம்பெண்புணர்வானும்
ஆலயமாமூதேவிக்கங்கு”

௫. சகலரும் கிரமப்படி ஒவ்வொருதினமும் தவறின்றிக் குறித்த குறித்த நேரங்களில் அநுட்டான செபங்களை முடிக்கும்பொழுது சிவநாமஞ்சொல்லி ஒருபத்திரமாவது சாத்தி, “வருந்திச்செய்வதுவானவன்பூசையே” என்றபடி அருச்சித்தல்வேண்டும். அப்படியே ஒவ்வொருதினமும் தேவாலயஞ்சென்று சிவபெருமானைத் தரிசித்துத் திரும்பி வீட்டுக்குவந்து போசனஞ் செய்தல்வேண்டும். இப்படிச் செய்யாதவர்கள் வசிக்கும் ஊர் காடென்றும், இவர்கள் மறுபிறவியிற் பெருவியாதிமுதலிய நோய்களால வருந்துவார்களென்றும் மகான்கள் அருளிச்செய்திருக்கின்றார்கள்.

### தேவாரம்.

“திருக்கோயிலில்லாததிருவிலூருந் திருவெண்ணீறணியாததிருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்கமூதாவூரும் விதானமும் வெண்கொடியுமில்லாவூரும், அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூரும், அவையெல்லாமூரல்லவடவிகாடே.”

"நாயகன்விழிமணிநன்ரோர்நாளுடல்
மீதணிந்திடின்வினைமுற்றும்மாயுமே."

"சோதிவிழிதந்தமணிசுத்தமொடணியாப்
பாதகரெடுத்தவுடல்பன்றியுடலாமே."

பட்டணத்துப்பிள்ளையார்பாடல்.

"ஆசைப்பட்டுப்பூணீர்உருத்திரசாதனம்
நீறெங்கும்பூசுகிலீர்வீணீரெளிதோ
மருதப்பிரான்கழல்சேர்வதற்கே."

ஆதலால் யாவரும் உருத்திராக்கத்தை எந்நேரமும் அணிய வேண்டுமெனை அறிக.

மேற்கூறியபிரகாரம் இம்மூலிகையை உண்பவர்களுக்கு அனுபானமாவது, கூறிப்போந்தபடி சிவபெருமானைத் தோத்திரம்பண்ணும்பொழுது, அவர்மீது மனம்பதிந்து கண்ணீர்ததும்பச் சரீரம் நடுநடுங்கிரோமாஞ்சமடையஅன்போடுதோத்திரஞ்செய்வதேயாம்.

இதற்குப் பிரமாணம்.

"கண்களிகூரநுண்துளியரும்பச்
சாயாவன்பினைநாடொறுந்தழைப்பவர்
தாயேயாகிவளர்த்தனைபோற்றி."

என்னும் மாணிக்கவாசகசுவாமிகள் வாக்கானுணர்க. இங்ஙனம் அன்பில்லாத பூசை தோத்திரங்கள் யாதொருபலனையுந் தரமாட்டாவாம்.

திருமந்திரம்.

"என்பைவிறகாயிறைச்சியறுத்திட்டுப்
பொன்போற்கனலிற்பொரியவறுக்கினும்
அன்போடுருகியகங்குழைவார்க்கன்றி
என்பொன்மணியினையெய்தவொண்ணாதே"

இன்னும் அன்போடருச்சிப்பவர் செய்யும் பாவம் புண்ணியமாகியும் அன்பிலார் செய்யும் புண்ணியம் பாவமாகியும் முடியும்.

"அரனடிக்கன்பர்செய்யும்பாவமுமறமதாகும்
பரனடிக்கன்பிலாதார்புண்ணியம்பாவமாகும்
வரமுடைத்தக்கன்செய்தமாவேள்விதீமையாகி
நரர்தமிற்பாலன்செய்தபாதகம்நன்மையாய்த்தே,"

சிவஞானதீபம்.

"அன்பிலாதநல்லறங்களுமைவகையாகமும்பிணமேயாம்
அன்பிலாதவாய்மையுந்தானமுமொழுக்கமும்விரதமும்பிணமேயாம்
அன்பில்ஞானமுமளவிலெச்சமயமுமறைந்திடிற்பிணமேயாம்
அன்பிலாதநல்லறம்பொருளின்பம்வீடனைத்திற்குமுயிருண்டோ"

அன்பே மேற்சொல்லிய மூலிகை உண்பதற்கு அனுபானம். என்று நன்குணர்ந்துகொள்க.

மேற்கூறியபிரகாரம் அன்பாகிய அனுபானத்தோடு சிவவழி பாடாகிய சஞ்சீவிமுலிகையை உண்டுவந்தால் பிறவியாகிய கொடிய நோய் நாசமாவதற்குச் சந்தேகமில்லை.

௬. சன்னிமுதலிய நோயால் வருந்துபவனுக்கு, ஒரு சிறந்த வைத்தியன் ஔஷதங்கொடுக்கும்போது இன்னவின்ன பதார்த்தங்கள் சேர்க்கலாகா மன்றும், “அதில் எள்ளத்தனை தான் றின்பீரே லெல்லாமருந்துமிறந்தீரே” என்னும் அகத்தியர்வாக்கைச் சொல்லியும் எச்சரித்துக் கொடுப்பானன்றோ. அதுபோலப் பிறவிப்பிணியை நாசமாக்கும் இச் சஞ்சீவிமூலிகையை உண்பவர்க்குப் பத்தியம் யாதோவெனில்:—

கொலை, களவு, பொய், கள்ளுணல், வியபிசாரம், சிவத்திரவிய அபகாரம், சிவநிந்தைசெய்தல், சூதாடுதல், பிறர்பொருளிச்சித்தல், பொறாமைகொள்ளுதல், தீயசொற்கூறல், வழக்கோரஞ்சொல்லல் முதலிய கொடுஞ்செயல்களை அடியோடகற்றல்வேண்டும். அப்படியகற்றாவிட்டால், மேற்சொல்லிய சஞ்சீவியை உண்ணுதலால் யாதொரு பலனுமில்லை. அதுமட்டோ இருபத்தெட்டுக்கோடி நரகமே வீடாகும். இவ்வுண்மை சிவதருமோத்தரம் சேதுபுராணம் திருக்குறள்முதலிய நூல்களாற் றுணியப்படும்.

சிவத்திரவியங்கவர்வோர், கவர்தற்குடன்பட்டோர், அவரோடு நட்புக்கொண்டோர் ஆகிய இவர்கள் படும்பாட்டைப் பின்வரும் “சிவபுண்ணியத்தெளிவுத்” திருவிருத்தத்தா னுணர்க.

“கங்கைவேணியன்பொருள்கவர்தீயவரிருக்கவதுகவர்தற்குள்ளந்
தங்கிமுயன் றவர்நினைத்தோரக்கணத்தினழிவரவர்தாமூதிற்க
வங்கவர்நிநட்புறுவோரவரொடுதீநட்பினர்குலம்வேரறவேமாய்வர்
வெங்கொடுந்நரகடைவர்சத்தியஞ்சத்தியமாணைவிளம்பினேனே.”

“அறத்தின்பொதுச்சொத்துமந்தணர்சொத்துமகதிசொத்தும்
திருத்திக்கதிர்க்கொட்டைநூற்கின் றசொத்துஞ்சிவன் றன்சொத்துங்
கருத்திற்பொதிந்தசிவஞானிசொத்துங்கலந்துகொண்டாற்
பருந்திப்பொதிக்கிட்டதீயதுபோறபஞ்சபாதகரே”

“ஈசனேமுதலாந்தேவகாரியவிக்கினஞ்செய்தோரிவர்பொருள்கவர்ந்தோர்
ஆசிநான்மறையோர்க்கிடர்செய்தோருழலையாக்குநோயிற்சுரநோயர்
பூசுநீறணியுமீசனுபரணங்கவர்ந்துபோய்க்குரம்பையிற்பூண்டோர்
சீசியன்னவர்நோயாரெடுத்துரைப்பார்செறிபுழுக்குட்டரோகத்தர்”

ஆலய அதிபதிகள், மடாதிபதிகள், அவற்றிற் சேவை செய்வோர்கள் செய்யும் அக்கிரமங்களைக் கண்டும் அவர்களோடு நட்புக்கொண்டு இனிய வார்த்தைகள் பேசித்திரிவோர் இவரனைவரும் வாசித்துணர்ந்து எச்சரிப்புறுவாராக.

மோட்சமடையவேண்டிச் செய்யும் எவ்வகைக் கிரியைகட்கும் சன்மார்க்கமே அத்தியாவசியகம் வேண்டியது.

### திருமூலர்வாக்கு.

"தெரிசிக்கப்பூசிக்கச்சிந்தனைசெய்யப், பரிசிக்கக்கீர்த்திக்கப்பாதருடிக்[னே
குருபத்திசெய்யுங்குவலயத்தோர்க்குத்,தருமுத்திசார்பூட்டுஞ்சன்மார்க்கந்தா

ஆதலால் யாவரும் விதித்தபத்தியத்தோடு மேற்கூறியசஞ்சீவியையுண்ணில் பிறவிநோய் வேரோடுநாசமாவதற்குச் சந்தேகமில்லை.

எ. மேற்குறித்த சஞ்சீவிமூலிகை மேலோங்கி வளர்ந்துவருவதற்கு விடப்படுந் தண்ணீர், கிரமப்படி சிவபிரானைப் பிரார்த்திப்பவர்கள் தங்கள் தங்கள் ஸ்திதிக்கேற்பப் பதிபுண்ணியங்களைச் செய்து வருதலேயாம்.

சத்திரங்கட்டுதல், சிவனடியார்க்கன்னங்கொடுத்தல், சமயகுரவர்களதும் மற்றும் அடியார்களதும குருபூசைகளைச்செய்தல், செய்பவர்களுக்குப் பொருளுதவிபுரிதல், ஆலயங்களிற்சென்று திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கேற்றல், திருமாலை தொடுத்துக்கொடுத்தல், நந்தாவனமமைத்தல், பசுமுதலியன நீரருந்துமாறு கேணிகுளங்களைத்தோண்டல், ஆவுரிஞ்சுதறிநாட்டல், சுமைதாங்கிகட்டல், நிழல்மரங்கள்நாட்டல், தண்ணீர்ப்பந்தல்வைத்தல், வித்தியாசாலை தாபித்தல், அல்லது பொருளுதவிசெய்தல் முதலியவைகளே பதிபுண்ணியங்களாம்.

இன்னும், தூரமானவிடங்களிலிருந்து வருபவர்கள், தங்கிப்பூசை போசனஞ்செய்து உறங்கும்படி சத்திரங் கட்டலின் பலன் மேல்வருஞ் செய்யுட்களா லுணரப்படும்.

"புல்லினுலொன்றுகோடிபுதுமண்ணாற்பத்துக்கோடி
செல்லுமாங்காலந்தன்னிற்செங்கல்லாற்பதினாயிரங்கோடி
அல்லினுங்குழலாய்கேளாய்ஆலயமடங்கடன்னைக்
கல்லினாற்சமைத்தபேர்கள்கைலைவிட்டகலார்மாதோ"

"ஒருவருக்கிடங்கொடுத்தாலும்பரிலொருவனாவன்
இருவருக்கிடங்கொடுத்தாலிமையவராகிவாழ்வன்
வருபவர்பூசைசெய்யவந்தவரிளைப்பையாற்றத்
திருமடங்கட்டிவைத்தோன்சிவனவனாவனன்றே"

### சிவபுண்ணியத்தெளிவு.

"மாதவர்மடங்களாதிவரதன்மந்திரங்களாதி
நாதமாமிலிங்கமாதிநளினபுட்கரணியாதி
சேதமுற்றிடின்முன்போலச்செய்கின்றோருறுபலந்தான்
ஓதுமுன்செய்தோர்தம்மினாயிரங்குணிதமோங்கும்."

இன்னும் திருக்கோயிலிற்சென்று அலகிடுதல், மெழுக்கிடுதல், மாலைபுனைதல், தீபமிடுதல் முதலான சிவபுண்ணியப் பலன்களுக்களவில்லை.

### திருவானைக்காப்புராணம்.

"ஆலயத்திலலகிடுவோர்க்கப்பயனோராயிரமாஞ்
சாலமெழுகிடுவோர்க்குத்தக்கபதினாயிரமாம்

மாலைபுனைந்தணிவோர்க்குவரும்பயன் நூறுயிரமாம்
கோதில்விளக்கிடுவோர்க்குக்கோடிபலன்கொடுத்திடுமே."

இனி அன்னதானப்பலனை உணர்த்துகில், அது தானங்களெல்லாவற்றுள்ளும் விசேடமுடையதும் சிவபெருமானை வசப்படுத்தி வேண்டிய இட்டசித்திகளை யடையச்செய்வதும் ஆகிய பதிபுண்ணியமாதலின் அதனினும் சிறந்தது பிறிதொன்றுண்டோ? மெய்யடியார்களுடைய பசிநோயைத் தீர்க்கும்பொருட்டு அன்னமென்னும் வலையை வீசினால் சிவபெருமானாகிய பட்சி அகப்படும்.

திருமந்திரம்.

அன்னவலையும்அரனொருபட்சியும், அன்னவலையையறிவாலறிந்து
அன்னவலையையார்வீசினாலும், அன்னவலையிலரன்படுவானே."

"ஆறொருகோடியந்தணருண்பதும், வேறொருகோடிவேதியருண்பதும்
நீறிடுமன்பர்க்குநிச்சயமோர்பிடி, சோறிடுவார்பலன்சொல்லவொண்ணாதே"

"மறையவர்கோடிபுசிக்கினடேசர்மலர்ப்பதத்தி
னறைகழலோர்தாஞ்சத்திக்கும்முப்பத்திருகவளம்
நிறைசிவயோகியுண்டால்முப்பத்திரண்டுமுறை
முறைதிருச்சிற்றம்பலத்தெஞ்ஞான்றும்முழங்கிடுமே."

திருவானைக்காப்புராணம்.

"அகரமீருறுகோடியருந்தவம்நூறுகோடி
சிகரமீரெட்டுக்கோடிசெய்திடும்பலன்களெல்லாம்
மகாகேதனனைவென்றமாதவனடியார்க்கன்னங்
கனவினிற்பகரக்கண்டபலனதுநிகராதன்றே"

மேற்சொல்லிய தருமத்தைச் சிவநேசருக்கேயன்றி ஏனைய மாமிசபட்சணிகளுக்குக் கொடுத்தால் அது படுமரத்துக்கூற்றிய தண்ணீர்போலச் சிறிதும் பலன்படாது பாவத்தையே கொடுப்பதாகும். ஔவையார்வாக்கு. "பாத்திரமறிந்து பிச்சைகொடு."

திருமந்திரம்:

'நிலமத்தனைபொன்னிர்மூடர்க்கீந்தால்-பலமுமற்றேபரபோகமுங்குன்றுமே'

"சீலமும்நோன்புமிலாதவர்க்கீந்தது—காலங்கழிந்தபயிரதுவாமே"

"மாசற்றசெல்வந்தேடுதற்குபாயம்—மனத்தழுக்கற்றவர்க்கீதல்"

ஆதலால் மாமிசபட்சணிகளுக்குஞ் சிவசின்னமில்லாதவர்களுக்குங் கொடுத்தல் கூடாது; கூடாது. அன்பர்களே! சற்றே சிந்தித்துப்பாருங்கள். தற்காலத்திலே அநேகர் கோவிலுக்குச் சென்று சுவாமிக்கு அபிஷேகமும் அன்னதானமுஞ் செய்வதாகப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு குறித்த தினத்தில் ஆலயத்துக்கு வந்து சுவாமிக்கு அபிஷேக நைவேத்தியங்களுக்காகிய திரவியங்களைக் கொடுத்துவிட்டுச் சந்நிதானத்திலிருக்கும் மடங்களிலிருந்து தாம் கொணர்ந்த அரிசிமுதலியவைகளைச் சமைத்து உருத்திராக்கம் காவிவஸ்திரம் புனைந்த ஆண்டிகள் சிலரோடு அவ்விடம்வரும் மதுமா

மிசபட்சணிகளையுஞ் சமபந்தியாகவே இருத்தி அன்னதானம்பண்ணி வீட்டுக்குச் செல்லுகிறார்களே. இதைவிடப் பெரும்பாதகம் என்ன? இப்படியே மாவைநகர்க் கந்தசுவாமியார் சந்நிதியில் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு கிழமைகளிலும் பார்க்கலாம். அன்னங்கொடுக்கவருபவர்கள் "குளிக்கப்போய்ச்சேறுபூசிக்கொள்வது" போல நற்கெதிபெறவேண்டிவந்து பெரும்பழிதேடிச் செல்லுகின்றார்களே! பரிதாபம்! பரிதாபம்!

இனி நற்கெதிபெறுதல் எப்படியெனில், கேளுங்கள்; அன்னதானஞ் செய்யவருபவர்கள் கோவிலுக்குவேண்டிய சாமான்களைக் கொடுத்தற்குமுன், அக்கோவிற் பணிவிடைகளைப்பார்க்கும் எசமான், பூசகர்கள், பரிசாரகர்கள், திருவிளக்கேற்றுபவர்கள், திருவலகிடுவோர், திருமெழுக்கிடுவோர், நந்தாவனப்பணிவிடைக்காரர், திருமாலைகட்டுவோர், பாற்காவடி எடுப்போர்முதலிய சிவதொண்டர்களுக்கு அறுசுவையோடு போசனஞ்செய்யும்படி அரிசி சாமான்களைக் கொடுத்தபின்பே கோவிலுக்கு வேண்டிய அபிஷேக பூசாத்திரவியங்களைக் கொடுத்தல்வேண்டும். அப்படிச்செய்யாதுவிடில்,

"அறுசுவையடிசிலீசனடியவர்க்களித்திடாது
உறுசிவலிங்கபூசைக்குதவுவோர்உணர்வொன்றின்றிக்
கறவையாம்பசுவென்றெண்ணிக்கல்லாவினண்டைசென்று
உறுதியாம்பால்கறக்கவெண்ணியதோற்றம்போலாம்"

என்றபடி கல்லாவியற்றிய பசுவினிடஞ்சென்று அதன்முலை பிடித்துப் பால்கறக்கச் சென்றதன்மைபோலச் சிறிதும் பலனைப் பெறமாட்டார்கள்.

ஏனெனில் கோயிற்பணிவிடைகாரர், அபிஷேகம் பூசை திருவிழாச்செய்ய வந்தவர்களுடைய கோவிற்பணிவிடைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குப்போய், செய்விப்பவர்களால் முன் கொடுக்கப்பட்ட அரிசி காய்கறிகொண்டு சமைத்த அன்னத்தைப் போசனஞ் செய்தாலன்றோ அச் செய்விப்போருக்குப் பலன் கிடைக்கும். அல்லாவிடில் பிரயோசனமில்லை. இன்னும்,

"கோதனத்தின்மூலலிங்கங்குருவாம்மேனி கூறியசங்கமம்முகமாங்கூறுங்காலைப், போதமூலைசரந்திடுமென்றதற்கன்பாகிப்புல்லளிக்கிலருந்தியிடாவுடலுங்கொள்ளா, நீதியினாலதிந்துமுகத்தளித்தாலெங்குநிறைவாகும்முத்திசிவலிங்கத்தேனும், ஏதமில்சங்கமத்தைவழிபடுவார்க்கன்றிஎண்ணரியசிவானுபவமெய்தொணாதே"

என்பது முதலியவற்றால் நன்குணர்ந்துகொள்க. மேற்காட்டிய சிவபுண்ணியங்களைத் தவறின்றிச் செய்தலே குறித்த சஞ்சீவியை வளர்க்கு முத்தமநீராம்.

௮. இனி இம்மூலிகை செழித்தோங்குதற்கு எருக்கூறுதும். இராமேசுரஞ்சென்று சேது தனுக்கோடிமுதலான விசேட தீர்த்த

ங்களில் விதிப்படி ஸ்நானம்பண்ணி இராமலிங்கப்பெருமானையும், பர்வதவர்த்தினியம்மை யாதியோரையுந் தெரிசித்து விதிப்படி அபிடேகம் பூசைகள் செய்வித்து, பிராமண போசனஞ்செய்தல்வேண்டும். மேலும் சேதுப்புராணத்தை வாசிப்பித்து அதன்பலனை யறிந்து அவ்வமுதத்தையுண்டு மரணபரியந்தம் மனதில் வைத்தல்வேண்டும். இப்படியே மதுரை சிதம்பரம் திருவண்ணாமலை காசிமுதலிய புண்ணியக்ஷேத்திரங்களுக்குச் சென்று சிவபெருமானைத்தரிசித்து ஆங்காங்குள்ள சிவனடியார்களுக்கு இயன்ற இயன்ற தருமஞ்செய்து வழிபடுதல்வேண்டும். இதுவே இம்மூலிகை செழித்து வளரச்செய்யும் உத்தம எருவாம். "மூர்த்திதலந்தீர்த்தம்முறையாய்வணங்கினர்க்கு-வார்த்தைசொலச்சற்குருவும்வாய்க்கும்பராபரமே" என்னுந் தாயுமானசுவாமிகளின் அருமைத்திருவாக்காலுணர்க.

பிறவியாகிய நோயை நீக்குதற்பொருட்டு, மேற்கூறிய உசிதமான நீர் வார்த்து நல்லெருவிட்டு வளர்க்கப்பட்ட சஞ்சீவிமூலிகையைக் குறித்த அநுபானத்தோடு பத்தியந் தவறாமற் புசிப்பவர்களுக்கு அவரவர்செய்த வினைக்கீடாகப் பலனைக்கொடுக்கும் கிருபைக்கடலாகிய சிவபெருமானாகிய வைத்தியர் குறித்தநோயை நீக்கி நிரதிசய வின்பத்தைக் கொடுத்தருளுவார்என்பது சத்தியம். சத்தியம். ஆதலால் சிவபெருமானை எந்நாளுந் தவறாது வழிபடல்வேண்டும்.

"அப்பனைநம்பியையாராவமுதினை, ஒப்பிலிவள்ளலையூழிமுதல்வனை
யெப்பரிசாயினுமேத்துமினேத்துமின், அப்பரிசீசனருள்பெறலாமே"

'எண்ணியகருமமுடியினும்முடியாதொழியினுமீசனைத்தொழுதல்புண்ணியம்'

"வல்லவன்வன்னிக்கிறையிடைவாரணம், நில்லெனநிற்பித்தநீதியுளீசனை
யில்லெனவேண்டாம்இறையவர்தம்முத, லல்லும்பகலுமருளுகின்றானே"

"வைகலுந்தம்மைவணங்குமவர்கட்குக்-கையிற்கருமஞ்செய்காட்டதுவாமே"

எக்குலத்தவராயினும் சிவபெருமானை அன்போடு வழிபட்டால் அவர்கையிலிருக்குங்கோல்போல அருள்செய்வார். சிதம்பரத்தில் முத்தியடைந்த வள்ளுவர் நால்வருள் ஒருவனாகிய பெத்தான் சாம்பானுக்கு எழுதிக்கொடுத்த கைச்சீட்டாவது,

"அடியார்க்கெளியன்றில்லைச்சிற்றம்பலவன்—கொற்றங்
குடியார்க்கெழுதுங்கைச்சீட்டுப்—படியின்மிசை
பெத்தான்சாம்பானுக்குப்பேதமறத்தீட்சைசெய்து
முத்திகொடுக்கமுறை." என்பதனாலறிக.

"துன்பமின்றித்துயரின்றியென்றுநீ-ரின்பம்வேண்டிலிராப்பகலேத்துமின்"

ஆனால் சிவபிரானை முற்பிறப்பில் வழிபடாதவர்கள், யாசகர்களாகி இரந்தவிடத்தும் உணவுகிடையாது உடுக்கத்துணியுமின்றி யலைவார்கள். இப்பிறவியில் இதுவே அடையாளம்.

பட்டணத்தார்வாக்கு.

"ஆற்றோடு தும்பையணிந் தாடுமம்பலவாணன் றன்னைப்
போற்றாதவர்க்கடையாளமுண்டோவிந்தப்பூதலத்திற்
சோற்றாவியற்றுச்சுகமற்றுச்சுற்றத்துணியுமற்று
எற்றாலும்பிச்சைகிடையாமலேக்குற்றிருப்பர்களே."

சிவவழிபாட்டால் முத்தியடையும் நெறியை இயன்றமட்டுஞ் சொன்னேன். அதுவும் முடியாதெனில்,

"இறக்கும்போதெனினும்யாவரேனும்பூதியங்கமெலாம்பூசி
யிருகண்மணியணிந்துளமதுநாமங்கேட்கவரையப்பெற்றால்
பிறப்பிறப்பொழிந்தெமக்குஞ்தோழனுமாய்க்கைலை [னே.
யுறப்புகுவரென்றுமுண்மையுண்மையிதுவென உமைக்கிறைவன்செப்பின

என்னும் பரமரகசியமாகிய சிவவாக்கை உய்த்துணர்ந்து கொள்க. எப்போதுஞ்சிவசிந்தனை உடையவர்க்கே மரணகாலத்திலும் அச்சிந்தனை வரும். ஏனையோர்க்கு அந்நினைவு வருதல் அருமை! அருமை!

"எல்லாஞ்சிவமென்னுமெண்ணமுனக்குண்டேல்
எல்லாநலனும்வந்தெய்துமே—எல்லாம்
சிவமன்றெனுமெண்ணஞ்சிந்தையிடையுண்டேல்
பவம்வந்துனை விழுங்கும்பார்."

வள்ளலார்சாத்திரம்.

யோனிவழியேயுதித்தவ்யோனிவழியேநினைத்தவ்
யோனிவழியேயொடுங்குமூமர்காள்—யோனிவழி
வாராவொருவனையேவந்தித்தால்யோனிவழி
வாராவகையருளுவான்.

பூர்வசென்மத்திற்செய்த நல்வினையாலீட்டிய நற்சிந்தை உடையவர்களே மேற்சொல்லியவற்றைப் பொய்யாமொழியெனவுணர்ந்து கைக்கொள்ளுவார்கள். முற்றீவினையா லீட்டிய தேகத்தைக்கொண்டு தீயவழிச்செல்லும் பாவிகளுடைய செவிகளுக்கு இவை ஏறா. எப்படியெனில், இறைச்சிசமைத்த பாண்டத்தில்விட்ட கெங்காசலத்தைப்போலவும், என்புண்ணும் நாய்க்குமுன்வைத்த நெய் தேனையும்போலவும் பயன்படா. பிரமாணம்:

கன்மமேபூரித்தகாயத்தோர் தஞ்செவியில்
தன்மநூல்புக்காலுந்தங்காது—சென்மம்
எலும்புண்டுசீவிக்குமீனநாய்நெய்தேனை
உண்டுசெமிக்குமோவோது. இன்னும்.

"காநாசாரமனுகாரிடைப்புகலும்நால்வேதம், இருக்குநெறிதான்புகலில்பாவநெறிசண்டாளர்பாண்டத்திற்கங்கைநீர், மேவுநெறியென்றேவிடு"

இனி சிவநாமத்தை உச்சரிப்பவர்களுடையபெருமையை கேளுங்கள் கேளுங்கள்! "கோகோடிதானங்கிரகணேயகாலேபிரயாககங்காயதிகற்பவாசம் யச்ஞாயுதம்மேருசொர்ண தானம்சிவேதிநாமஸ்மரணேயதுல்யம்" என்பது ஓர் மகான்வாக்கு. அதுநிற்க.

சமயதீட்சை பெறுதவர்களுடைய உணவு, கோழி பன்றி நாய் முதலியவற்றினுணவுக்கொப்பாகும். அதுமட்டோ இவர்கள் திருக்கோவிலுட் பிரவேசித்தலும் சிவநூல்களை வாசித்தலும் ஆகாவாம். சிவதீட்டையில்லாதவன் வாசிக்கக் கேட்பவர்கள் மறுபிறவியில் வனவேடர்களாயும் அடுத்தபிறவியில் நாயாகியும் பிறந்து அலைந்து திரிவார்கள். இதற்குப்பிரமாணம்:

"குருவினிடத்துபதேசங்கேளாதானூண்கோழிபன்றிநாய்வயிறுவளர்த்தாலொக்கும், மருவியவன்றிருக்கோவில்தொழச்சென்றாலும்மாபாவியென்றுதெய்வம்மறைந்துநிற்கும், உருகியவன்சிவநூல்களோதலாகாவோதுகினுமவனுரையைக்கேட்கின்றோர்கள், வருபிறப்பில்வேடராய்ப்பிறந்துபின்னும் நாயாகப்பிறந்துழன்றுஅலைவார்தாமே."

மேலும் தீட்சைபெற்ற நாயகனுக்குத் தீட்சைபெறுத நாயகி அன்னத்தைச்சமைத்தலும்கொடுத்தலும்மகாதோஷம். பிரமாணம்:

"தானுபதேசியாகித்தையலாள்தீட்சையின்றிப்
போனகம்படைப்பாளாகிற்புலையரோடெண்பதொக்கும்."

என்பனவற்றால் ஆண்பெண்ணென்னு மிருபாலாரும் தீக்ஷை பெறல்வேண்டுமெனவறிக.

இதிற்கூறப்பட்டவிஷயங்கள், நாம் ஆன்மார்த்தமாக வருந்திக் கற்ற நூல்களினின்று பலர்க்கும் உபகாரமாகும்பொருட்டு அவ்வப்போது குறித்துவைத்துத் திரட்டப்பட்டனவாதலால், அவற்றைச் சைவசமயிகள் யாவரும் அன்போடேற்று வாசித்துணர்ந்து கைக்கொண்டொழுகிப் பிறவிப்பிணியை வேரறுத்து ஈடேறுவார்களாக.

ஆனலிப்பிறவியில் மேற்காட்டியபடி யனுட்டித்துவரும்போது கிரமத்தவறால் மரணம்நேரிட்டு மறுபிறவியெடுக்க நேரிட்டால் மறுசென்மம் மானுடதேகமாய்ப் பிறக்கவும் வறுமைப்பிணிமுதலாகிய முப்பிணிகளால் வருந்ாதபடி நந்தியந்தேவர் சிவபெருமானிடம் கேட்டுப்பெற்ற "பிறதனம்மதித்திடாவாழ்வு" முதலாகிய பதினறு வரங்களையுஞ்சிவபெருமானே எனக்குத் தந்தருளவேண்டுமென்று நாடோறும் அந்திசந்தி தோத்திரஞ்செய்து வரவேண்டியது.

அப்பதினறு வரங்களாவன.

மறையினிந்தனை சைவநிந்தனைபொறுமனமும்
தறுகணைம்புலனே தனக்கேவல்செய்சதுரும்
பிறவிதீர்த்தெனுப்பேதையர் தம்மொடுபிணக்கும்
உறுதிநல்லறஞ்செய்பவர் தங்களோடுறவும்.

மனமும்வாக்கும்நின்னன்பர் தாமொருப்படுமகிழ்வும்
கனவிலுஞ்சிவனன்பருக்கடிமையாங்கருத்தும்
நினைவில்வேறொருகடவுளைவழிபடாநிலையும்
புனிதநற்சிவகீர்த்தியேயுரைதருபொலிவும்.

தீமையாம்பரசமயங்களொழித்திடுதிறமும்
எமுறும்பரமாதரைப்பரிசியாதியல்பும்

வாய்மையாகவேபிறர்தனமகித்திடாவாழ்வும்
தூயநெஞ்சினிற்பிறர்மனேநோக்கிடாத்துறவும்.

யாதுகேட்பினுமன்பருக்கீவதேயியல்பும்
மாதவத்தினருறுப்பினும்வணங்கிடுமெகிழ்வும்
ஓதுநல்லுபதேசத்தினுறுதியுமன்பர்
தீதுசெய்பினுஞ்சிவலீலையெனக்கொளுந்தெளிவும்,என்பவைகளே

இன்னும் திருநாவுக்கரசுநாயனாரருளிய "புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாநின்னடியென்மனத்தேவழுவாதிருக்கவரந்தரவேண்டும்" என்னும் பாவையும், இன்னும் ஒருமகானுடைய வாக்கு.

துறக்கமெய்தினும்நரகிற்றுயினும்
இறக்கினும்பிறக்கினுமின்பந்துய்க்கினும்
பிறைக்கொழுந்தணிசடைப்பெருமானின்பதம்
மறக்கொணுநல்வரம்வழங்கவேண்டுமால்.

என்னும் வரங்களையும் அந்திசந்தி கண்களிகூர நண்டுளியரும்ப ரோமஞ்சிலிர்ப்ப மனவொருப்பாட்டோடு தோத்திரம்செய்து வந்தால் சிவபெருமான் மேற்படி வரங்களைக் கொடுத்தற்குச் சந்தேகமில்லை.

மேற்காட்டிய முப்பிணிகளையுஞ் சங்கரிக்க இன்னுமொரு மார்க்கமுளது; கேளுங்கள்.

சுப்பிரமணியக்கடவுளின் வரப்பிரசாதியாய்த் திருவண்ணமலையில் எழுந்தருளியிருந்த அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்காரத்துள்ள இரண்டுபாக்களையாதல் அந்திசந்தி செபவந்தனுதி முடிக்கும்போது அன்போடு தவருது பாராயணஞ்செய்துவந்தால் முப்பிணியும் நீங்குவதற்குச் சந்தேகமில்லை.

சலங்காணும்வேந்தர்தமக்குமஞ்சார்யமன்சண்டைக்கஞ்சார்
துலங்காநரகக்குழியணுகார்துட்டநோயணுகார்
கலங்கார்புலிக்குங்கரடிக்கும்யானைக்குங்கந்தனன்னூ
லலங்காரநூற்றுளொருகவிதான்கற்றறிந்தவரே.

முடியாப்பிறவிக்கடலிற்புகார்முழுதுங்கெடுக்கும்
மிடியாற்படியில்விதனப்படார்வெற்றிவேற்பெருமான்
அடியார்க்குநல்லபெருமாளவுணர்குலமடங்கப்
பொடியாக்கியபெருமாடிருநாமம்புகல்பவரே.

அந்தத் திருநாமம்.

அரிதிருமருகா முருகசரவணபவா.

இந்தச் சடாட்சரமந்திரத்தைத் தினந்தோறும் நூற்றெட்டுமுறையாவது செபித்து வாருங்கள். செபித்துவந்தால் மேற்கூறிய முப்பிணியும் நாசமாவதற்குச் சந்தேகமில்லை.

# சமயகுரவர் நால்வருஞ் செய்த அற்புதங்கள்.

### க வது. மாணிக்கவாசகசுவாமிகள்.

பெருகுவைகைதனையடைப்பிக்குமேபிரம்படிக்குப்பிரான்மேனிதண்ணுமே
நரியெலாம்பரியாகநடக்குமேநாரிபேடிதனைப்பேசுவிக்குமே
பரவைபுட்டுக்குமண்சுமப்பிக்குமேபரமனேடெழுதக்கோவைபாடுமே
வரிவிற்புத்தரைவாதினில்வெல்லுமேவாதவூரர்வழங்கியபாடலே.

### உ வது. திருஞானசம்பந்தசுவாமிகள்.

புனலினேடெதிர்போமெனப்போகுமேபுத்தரைத்தலைதத்தெனத்தத்துமே
கனலினேடிடப்பச்சோலையாகுமேகதவுமாமறைக்காட்டிலடைக்குமே
பனையிலாண்பனைபெண்பனையாகுமேபழையவென்புபூம்பாவையதாகுமே
தினகராவிடம்தீரெனத்தீருமேசிறந்தசம்பந்தர்செந்தமிழ்ப்பாடலே.

### ௩ வது. சுந்தரமூர்த்திசுவாமிகள்.

வெங்கராவுண்டபிள்ளைவிளைக்குமேவெள்ளையானையின்மீதேறிச்செல்லுமே
மங்கைபாகனைத்தூதுசெய்விக்குமேமருவியாறுவழிவிட்டுநிற்குமே [மே
செங்கல்லும்பசும்பொற்பாளமதாகுமேதிகழுமாற்றிட்டுச்செம்பொனுரைக்கு
துங்கவான்பரிசேரற்குநல்குமேதுலங்குநாவலூர்ச்சுந்தரர்பாடலே.

### ௪ வது. அப்பர்சுவாமிகள்.

தலைகொணஞ்சமுதாகவிளையுமேதழல்கணீறுதடாகமதாகுமே
கொலைசெய்யானைகுனிந்துபணியுமேகோடராவின்கொடுவிடந்தீருமே
கலைசெய்வேதவனப்பதிதன்னிலேகதவுதானுங்கடுகத்திறக்குமே
அலைகொள்வாரியிற்கல்லுமிதக்குமேஅப்பர்செப்புமருந்தமிழ்ப்பாடலே.

முற்றிற்று.

ஆ. சுப்பிரமணியபிள்ளையவர்கள்

லோகோபகாரமாக

வெளிப்படுத்திய

நூல்கள்.

| | | |
|---|---|---|
| ௧. இராமபாணம் | புத்தகம் | ௧000 |
| ௨. சரநூல் | ,, | ௧000 |
| ௩. பிறவிப்பிணியைச்சங்கரிக்கும் அமுதசஞ்சீவி | ,, | ௧000 |
| ௪. முப்பிணியைச் சங்கரிக்கும் சஞ்சீவி | ,, | ௧000 |

இப்புத்தகங்கள் தேவையானவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.